முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education, Northern Province

58 | T | I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) முன்னோடிப் பரீட்சை - 2021
**General Certificate of Education (Advance. Level) Pilot Exam - 2021**

நாடகமும் அரங்கியலும் I
**Drama & Theater I**

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

*எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக

*இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிவுசெய்க.

1. “மேலைத்தேயக் கலைகளில் மேலோங்கியிருக்கும் பண்பு?
   1. அறிவும், கற்பனையும்
   2. ஆன்மஞானமும், இறைபக்தியும்
   3. இறைபக்தியும், ஒழுக்கமும்
   4. இயற்கையும், யதார்த்தமும்
   5. கற்பனையும், ஆன்மஞானமும்

2. பின்வருவனவற்றுள் வெளிக் கலையை மாத்திரம் கொண்ட கலை வடிவங்கள் ?
   1. கட்டம், சிற்பம், ஓவியம்
   2. ஓவியம், சிற்பம், இசை
   3. இலக்கியம், சிறுகதை, நாவல்
   4. நடனம், நாடகம், சினிமா
   5. இலக்கியம், மட்பாண்டம், நடனம்

3. “உள்மனதில் பதிந்த படமே கலை” எனக் குறிப்பிட்டவர்?
   1. அரவிந்தர்
   2. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி
   3. மாசேதுங்
   4. ரவீந்திரநாத்தாகூர்
   5. இராமதாஸ்முகர்ஜி

4. பின்வரும் கூற்றுக்களில் ஒபேறா பற்றிய மிகப் பொருத்தமான கூற்று ?
   1. இசைக்கேற்ப உடலைப் பலவாறு பயன்படுத்தி ஆடப்பெறுவதாகும்
   2. முதன் முதலாக சீனாவில் தோற்றம் பெற்றுக் கொண்டது
   3. காவியத்தன்மையான மொழி பயன்படுத்தப்படும்.
   4. பிரசித்தி பெற்ற ஒபேறா நாடக வடிவமாக அன்னத்தடாகம் விளங்குகின்றது.
   5. 17 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுக் கொண்டதாகும்

5. பின்வருவனவற்றுள் தேயிலைத் தோட்டங்களை காவல் செய்யும் முகமாக நிகழ்த்தப்படும் சடங்கு?
   1. பொன்னர் சங்கர் கூத்து
   2. காமன் கூத்து
   3. அருச்சுனன் தபசு
   4. வீரபத்திரர் ஆட்டம்
   5. காடேறித்திருவிழா

6. அரிஸ்ரோட்டலின் கவிதையியல் என்ற நூலினைத் தமிழிலே மொழி பெயர்த்தவர்?

1. இ.முருகையன்
2. ஆ.மணவாளன்
3. கா.சிவத்தம்பி
4. குழந்தை ம.சண்முகலிங்கம்
5. அரு.சேமசுந்தரம்

7. அரிஸ்ரோட்டில் பிறந்ததாக குறிப்பிடப்படும் ஆண்டு?

1. கி.மு 344  2. கி.மு 364  3. கி.மு 374  4. கி.மு 384  5. கி.மு 394

8. ‘‘கதை தழுவி வரும் கூத்தே நாடகம்’’ எனக் குறிப்பிட்டவர்?

1. இளம்பூரணார்
2. அடியார்க்கு நல்லார்
3. புரதர்
4. அபிநவகுப்தர்
5. பேர்னாட்சோ

9. அரங்க வெளி ஒன்றிலே நடன வடிவாக்கம் ஒன்றினை முன்னெடுக்கம் போது கவனத்தில் கொள்ளவேண்டிய ஒழுங்கு முறை ?

1. விடயம், வடிவம், திசை, வேகம், தாளம்.
2. விடயம், வேடஉடை, ஒளி, ஒலி
3. வண்ணம், பயிற்சி, ஆர்வம், வடிவம், வேகம்.
4. பயிற்சி, படிமம், திசை, விருப்பம், ஒழுங்கு
5. விடயம், இசை, வண்ணம், ஒளி, ஒலி.

10. ஐரோப்பிய நாடக வரலாற்றின் மிகப் பழமையான நாடக எழுத்துருவாக கொள்ளப்படுவது?

1. த பேர்சியன்
2. புரமீதியஸ் பௌண்ட்
3. அகமெம்னன்
4. தசப்ளையன்ற் வுமன்
5. த சோபெறி

11.ஸ்பானிய நாடக மேடையில் அதிக தாக்கத்தினை உண்டுபண்ணிய நாடகவியலாளர்?

1. பியல்கொனே
2. லோப்போ டிபேக்கா
3. றசீன்
4. யூஜின் அயனஸ்கோ.
5. லெட்ஸ்கின்னதாவ்

.

12. சாமுராய் போர் வீரர்களின் வரலாற்றினைக் கூறும் நாடக வகை?

1. நோ  2. கபுக்கி  3. புன்றகு  4. கோவாகா  5. ஒபேரா

13. ஈழத்து சமகால அரங்க வரலாற்றின் நெறியாள்கைப் போக்கில் பெரும்பாலும் உள்ளடங்காதது?

1. கலந்துரையாடல் நெறியாள்கை.
2. வசதி செய்பவராகவும் வழிப்படுத்துபவராகவும் தொழிற்படும் நெறியாள்கை.
3. படிமங்களுடன் பார்ப்போரை ஊடாட விட்டு ஆற்றுகையை வளர்த்துக்கொள்ளும் நெறியாள்கை.
4. கலந்துரையாடலையும் நியம ஒழுங்கு முறையையும் பின்பற்றி முன்னெடுக்கும் நெறியாள்கை.
5. நியம ஒழுங்கு முறையை மட்டும் பின்பற்றி முன்னெடுக்கும் நெறியாள்கை.

14. வடமொழி நாடகத்தின் ஆரம்பத்தில் இடம் பெறும் ‘‘பூர்வரங்க’’ விதிகளில் திரை மறைவில் இடம் பெறாத நிகழ்வு ?

1. வக்த்ரபாணி
2. பரிகட்டானா
3. ஸம்கோடனா
4. மார்க்காஸாரிதம்
5. ரங்கத்வாரம்

15. ‘‘எந்தையும் தாயும் நாடகத்தினை முதன் முதலாக நெறியாள்கை செய்தவர்.

1. கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம்
2. கலாநிதி க. சிதம்பரநாதன்
3. வைத்திய கலாநிதி சிவயோகன்.
4. பேராசிரியர் சி. மௌனகுரு
5. பேராசிரியர் கா. சிவத்தம்பி

16. சமயக்கரணங்கள் நாடக அம்சங்களைக் கொண்டுள்ளன. இதிலிருந்து மக்கள் அரங்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறியவர்?
   1. ஜோன் ஹரீசன்
   2. கீத்
   3. றிட்ஜ்வே
   4. கா. சிவத்தம்பி
   5 சி.மௌனகுரு

17. தமிழக நாடக வரலாற்றிலே காலத்திற்கு காலம் ஆடல்களை நிகழ்த்துவோரைச் சிறப்புப் பெயர் கொண்டு அழைத்து வந்தனர் அந்தவகையில் “தேவதாசிகள்” எனும் பெயர் கொண்டு நடனமாடிய பெண்கள் எக்காலத்தில் அழைக்கப்பட்டனர்?
   1. சங்க காலத்தில்
   2. சங்கமருவிய காலத்தில்
   3. சிலப்பதிகார காலத்தில்
   4. சோழர் காலத்தில்
   5. விஜய நகர நாயக்க மன்னர் காலத்தில்

18. “உண்மையான மகிழ்நெறி என்பது ஒரு தேசிய இனத்தின் மடமைகளையும் குறைபாடுகளையும் பேசுகின்ற சித்திரம் எனக் கூறியவர்.
   1. வோல்டயர்
   2. அரிஸ்ரோபன்ஸ்
   3. மெனாண்டர்
   4. ரெரன்ஸ்
   5. ஆதர்மில்லர்.

19. பின்வருவனவற்றுள் வாசாப்பு பற்றிய தவறான கூற்று.
   1. ஆண்கள் மாத்திரம் நடிப்பர்
   2. பெண்கள் களரியில் அனுமதிக்கப்படுவதில்லை
   3. கட்டியகாரன் அரசனின் வருகையை எடுத்துரைப்பர்
   4. புலசந்தோர் நாடகக் கதையை அறிமுகம் செய்வர்
   5. கதையில் புனிதர்கள் பிரதானமாக இடம் பெறுவர்

20. நாடகச் சூழல், உணர்வு என்பவற்றினை கருத்திற் கொண்டே இசை நாடகப் பாடல்களுக்கான இராகங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன அந்தவகையில் தாலாட்டினை வெளிப்படுத்த பயன்படும் இராகம்?
   1. மோகன இராகம்
   2. முகாரி இராகம்
   3. நீலாம்பரி இராகம்
   4. சிவரஞ்சினி இராகம்
   5. அடானா இராகம்

21. நாடகமொன்றின் வகைப்பாட்டை வெளிப்படுத்துவது.
   1. கரு 2. மோதுகை 3. மோடி 4. கதைப்பின்னல் 5. பாத்திரங்கள்

22. ஐரோப்பிய அரங்கிலே நவவேட்கை வாதத்தின் தந்தையாக திகழ்பவர்.
   1. பீற்றர் புறுாக்.
   2. ஜேர்சி குறட்டோவஸ்கி.
   3. அன்ரனியோஆர்த்தே.
   4. றிச்சட்செக்னர்.
   5. மேஜர்கோல்ட்.

23. சமஸ்கிருத நாடகாசிரியரான பாசர் எழுதிய நாடகங்கள் பற்றி அறிய உதவும் நூல்.
   1. நாட்டிய சாஸ்திரம் .
   2. தசரூபகம்.
   3. திருவந்தரம் .
   4 திருமந்திரம்.
   5. புகிததென்

24. மதமாற்றம் என்ற நூலின் ஆசிரியர் மற்றும் அந்நூலினைப் பதிப்பித்தவர் முறையே?
   1. அ.ந. கந்தசாமி , க.திலகநாதன்
   2. க.கணபதிப்பிள்ளை, க. சிவத்தம்பி
   3. அம்மன்கிளி முருகதாஸ்
   4. பீ. எஸ்.இராமையா, அ.ந.கந்தசாமி
   5. அ.ந. கந்தசாமி, க.சிவத்தம்பி

25. ஈழத்துப் பல்கலைக்களக நாடக மரபிலே பிதாமகராகக் கொள்ளப்படுபவர் ?
    1. வண.பிதா பிரான்சிஸ் கிங்ஸ்பெரி
    2. விபுலானந்த அடிகள்
    3. க.கணபதிப்பிள்ளை
    4. சு. வித்தியானந்தன்
    5. கா.சிவத்தம்பி

26. விட்டில் , ஓலங்கள் அன்றேல் வழிகாட்டி ஆகிய நாடகங்களை ஆற்றுகை செய்த பல்கலைக்கழகம் ?
    1. கொழும்பு பல்கலைக்கழகம்
    2. வித்தியலங்கார பல்கலைக்கழகம்
    3. பேராதனைப் பல்கலைக்கழகம்
    4. மட்டக்களப்பு பல்கலைக்கழகம்
    5. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

27. டாப்பர் மாமா எனும் பாத்திரம் இடம் பெறும் கூத்து வடிவம்
    1. காத்தவராஜன் கூத்து
    2. வடமோடிக் கூத்து
    3. தென்மோடிக் கூத்து
    4. மகிடிக் கூத்து
    5. பொன்னர் சங்கர் கூத்து

28. அரங்க ஆய்வு கூடம் என்ற அரங்க நிறுவனத்தின் ஸ்தாபகர்?
    1. பேராசிரியர் சி. மௌனகுரு
    2. குழந்தை ம. சண்முகலிங்கம்.
    3. த.தேவானந்த்
    4. க.சிதம்பரநாதன்
    5. கலாநிதி. நீ .மரியசேவிய அடிகளார்

29. திருமறைக்கலாமன்றம், நடிகர் ஒன்றியம், நாடக அரங்கக்கல்லூரி ஆகிய அரங்க நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டுகள் முறையே ?
    1. 1976, 1978, 1990
    2. 1965, 1970, 1978
    3. 1965, 1970, 1988
    4. 1960, 1965, 1978,
    5. 1978, 1978, 1988

30. ஈழத்து தமிழ் நாடக வரலாற்றிலே ஆற்றுகை செய்யப்பட்ட பிரக்ஞை பூர்வமான முதற் தெருவெளி நாடகம்
    1. திருவிழா
    2. கசிப்பு
    3. மாயமான்
    4. மானிடம் சுடரும் ஓர் விடுதலை
    5. விடுதலை

31. பின்வரும் கூற்றுக்களுள் மிகைப்பாட்டு வாதத்துடன் தொடர்பற்ற கூற்று?
    1. உணர்ச்சி முனைப்புடைய இன்ப முடிவுடைய நாடகங்களாக காணப்பட்டன.
    2. கையிருப்பு பாத்திரங்கள் காணப்படல்.
    3. .பார்ப்போரை வியப்பிற்குள்ளாக்கும் நாடகங்கள்
    4. ஆடலும் பாடலும் முக்கிய இடம் பெறாது.
    5. அதிகளவு உணர்ச்சிகளைக் கொண்டு நடித்தல்.

32. சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பை ஆதரித்து நாடகத்தை வளர்த்துச் செல்லும் சந்திகளில் நாடகத்தின் நோக்கத்தால் உண்டாகும் நெருக்கடி நிலையைக் குறிக்கும் சந்தி?
    1. முக சந்தி
    2. பிரதி முகசந்தி
    3. கர்ப்ப சந்தி
    4. விமர்சக சந்தி
    5. நிர்வகண சந்தி

33. பின்வரும் நவீன அரங்கவியலாளர்களில் தனது ஆற்றுகையானது சமய அனுபவம் போல எல்லோருக்கும் உண்மையு விளக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டவர்.
    1. ஜேர்சி குறட்டோவஸ்கி
    2. அன்ரோனியோ ஆர்த்தே
    3. பீற்றர்புறூக்
    4. அகஸ்தாபோவால்
    5. றிச்சட் செக்னர்

34 தமிழக நாடகமரபிலே அரசியற் பூசல்கள் அற்ற, பொருளாதார வளர்ச்சி பெற்ற கலைகளின் வளர்ச்சிக்கு அரசஆதரவு கிடைத்த பொற்காலமாகக் கருதப்படும் காலம்?.

1. வீரயுக காலம்
2. நிலப்பிரபுத்துவ காலம்
3. வணிக யுக காலம்
4. பல்லவர் காலம்
5. சோழர் காலம்

35. தோரிய மடந்தையர் எனும் கலைஞர் சிறப்புற்றுவிளங்கிய காலம்.


1. சங்ககாலம்
2. சிலப்பதிகாரகாலம்
3. பல்லவர் காலம்
4 சோழர்காலம்
5. விஜயநகரநாயக்கர் காலம்


36. தேவசகாயம்பிள்ளை, கருங்குயில், குன்றத்துக்கொலை போன்ற கூத்துக்கள் .


1. வடமோடிக் கூத்தக்கள்
2. தேன்மோடிக் கூத்தக்கள்
3. வடபாங்குக் கூத்தக்கள்
4. தென்பாங்குக் கூத்தக்கள்
5. முல்லை மோடிக் கூத்தக்கள்

பின்வரும் படங்களை அவதானித்து 37 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக


அ


ஆ


இ


ஈ

37. படம் "**அ**" குறித்து நிற்பவருடன் தொடர்புடைய வாதம் ?

1 இயற்பண்பு வாதம்
2. யதார்த்த வாதம்
3. யதார்த்த விரோத வாதம்
4. நவவேட்கை வாதம்
5. மனோரதிய வாதம்.

38. .படம் "**ஆ**" குறித்து நிற்கும் அரங்கவியலாளருக்குரிய அரங்கவகை?

1. அபத்த அரங்கு
2. காவிய அரங்கு
3. ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு
4. குரூர அரங்கு
5. வறுமை அரங்கு

39. படம் "**இ**"குறிக்கும் அரங்கவியலாளருக்குரிய தேசம் .

1. ஐரிஸ்
2. அமெரிக்கா
3. லத்தீன் அமெரிக்கா
4. நோர்வே
5. இங்கிலாந்து

40. படம் "ஈ" குறித்து நிற்கும் நாடகவியலாளரின் பிரபல்யமான நாடகங்களில் ஒன்று

1. செறிப்பழத் தோட்டம்
2. வெண்கட்டி வட்டம்
3. கோடாவுக்காகக் காத்திருத்தல்
4. கிங்கிலியர்
5. ஒரு பாவை வீடு

## பகுதி II

**அறிவுறுத்தல்**

பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களுக்குக் குறையாமலும் பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களுக்கு குறையாமலும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

**1.**

1. நாடகக் கலையின் தோற்றத்தின் படிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக?
2. நாடகக்கலையின் இயல்புகள் ஐந்தினை விளக்குக?
3. நவீன அரங்குகளின் தோற்றத்திற்கு பின்னணியாய் அமைந்த காரணிகளைமதிப்பீடு செய்க?

(3 X 5 = 15 புள்ளிகள்)

2. நவீன அரங்கப் போக்கில் பின்வரும் அரங்கவியலாளர்கள் ஒவ்வொருவரும் ஏற்படுத்திய மாற்றங்களை விபரிக்குக

1. அகஸ்தாபோல்
2. ஜேர்சி குறட்டோவஸ்கி
3. றிச்சட் செக்னர்

(3 X 5 = 15 புள்ளிகள்)

3.

1. சமஸ்கிருத அரங்கிலே பார்ப்போர் பெறும் உணர்வுநிலை அனுபவத்தினை விளக்குக
2. சமஸ்கிருத நாடகாசிரியரான பாசரின் நாடகப் பங்களிப்பினை மதிப்பீடு செய்க
3. மார்க்க அரங்கிலே ஆடப்பட்ட நாடக வகைகளைக் குறிப்பிட்டு விபரிக்குக

(3 X 5 = 15 புள்ளிகள்)

## பகுதி B

4. அரங்க வெளிகள் ஆற்றுகையில் தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன அந்தவகையில் வகையில் ஜப்பானிய கபுக்கி அரங்கு மத்தியகால பூத் அரங்கு என்பவற்றின் மாதிரிகளை வரைந்து அவ்வரங்குகளின் ஆற்றுகை முறைமையினை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

5. ஐரோப்பியரது வருகையானது தமிழக நாடக மரபிலே ஏற்படுத்திய தாக்கத்தினை மதிப்பீடு செய்க?

(15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1. நெறியாள்கை
2. இசை நாடகங்கள்
3. மூன்றன்ஒருங்கியைபு
4. தொலைக்காட்சி நாடகம்
5. நாடக விமர்சனம்

(3 X 5 = 15 புள்ளிகள்)